கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.148/2011** தேதி: **28.01.2026**

பிரதிவாதி தரப்பு சாட்சி - 2 (முருகன், த/பெ.குப்புசாமி) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

(1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் 12 ஆம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு என்ன தொழில் என்றால் விவசாயம் பார்க்கிறேன். யாருக்கு சார்பாக சாட்சி கூற வந்துள்ளேன் என்றால் கோயிலுக்கு சார்பாக சாட்சி சொல்ல வந்துள்ளேன். எதன் அடிப்படையில் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் ஊர்காரர் என்ற முறையில் சாட்சி சொல்ல வந்துள்ளேன்.

(2) வழக்கு கோயிலை சுற்றிவுள்ள நிலங்களை சம்மந்தப்பட்டது என்றால் சரிதான். இந்த நிலங்கள் என்ன சர்வே எண்ணில் உள்ளது என்றால் சர்வே எண் எனக்கு தெரியாது. கோயில் நிலம் என்பதற்கு என்ன தஸ்தாவேஜிகளை நான் பார்த்துள்ளேன் என்றால் மாவட்ட ஆட்சியரிடம் இருந்து வந்த உத்தரவை நான் பார்த்துள்ளேன். அதில் கோயிலுக்கு இனாமாக கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டு இருந்தது. அது என்ன சர்வே எண் என்று எனக்கு ஞாபகம் இல்லை.

(3) வழக்கு சொத்து சம்மந்தமாக எத்தனை வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சங்கர், இந்திராணி , மகேஷ்வரி மற்றும் சின்னதம்பி ஆகியோர் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். அசல் வழக்கு எண் 140/2011 ல் வழக்கு தாக்கல்

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.01.28 17:18:23 +0530

செய்த சங்கர் என்ன சர்வே எண்ணுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அசல் வழக்கு எண் 539/2010 ல் வழக்கு தாக்கல் செய்த இந்திராணி என்ன சர்வே எண்ணுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அசல் வழக்கு எண் 473/2010 ல் வழக்கு தாக்கல் செய்த சின்னதம்பி என்ன சர்வே எண்ணுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அசல் வழக்கு எண் 148/2011 ல் வழக்கு தாக்கல் செய்த மகேஷ்வரி என்ன சர்வே எண்ணுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் எனக்கு தெரியாது. கோயில் நிலத்தில் உள்ளார்கள்.

(4) மேற்சொன்ன வாதிகள் அனைவரும் அச்சொத்தில் சுமார் 50 ஆண்டு காலமாக வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். கோயிலுக்கும் அவர்களுக்கும் இடையில் எந்த வித வாடகை ஒப்பந்தமும் இல்லை என்றால் இந்து அறநிலையத்துறைக்குத்தான் தெரியும். வாதிகள் வாடகை கொடுத்தார்கள் என்பதற்கு தஸ்தாவேஜிகள் நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை.

(5) எனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கு சொத்தானது கோயிலுக்கு பாத்தியமான சொத்து இல்லை என்றாலும் அது அரசாங்க புறம்போக்கு என்றாலும் ஆகவே தான் எனக்கு அதனைப்பற்றி ஏதும் தெரியவில்லை என்றாலும் சரியல்ல. உயர் நீதிமன்றம் வழக்கு சொத்தினை புறம்போக்கு நிலம் என்று தீர்ப்பு வழங்கியுள்ளது என்றால் தெரியும்.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.

குறுக்கு விசாரணை முற்றிற்று .

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.01.28 17:18:31 +0530

மறுவிசாரணை இல்லை.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவரிடம் கையொப்பம் பெறப்பட்டது.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be correct.*

PHEBE B Digitally signed by PHEBE B Date: 2026.01.28 17:18:35 +0530

***Additional District Munsif , Cuddalore.***